டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 21.07.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 028 - Madurai | Online Edition

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சின்ன வெங்காயத்திற்கான விதைப்புக்கு முந்தைய விலை முன்னறிவிப்பு

கோயம்புத்தூர், ஜூலை 20

சின்ன வெங்காய உற்பத்தியில் உலகளவில் இந்தியா முன்னணியில் உள்ளது. மேலும், தென்னிந்திய மாநிலங்களான தமிழ்நாடு, கர்நாடகாமற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகியவற்றில் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டின் மொத்த வெங்காய உற்பத்தியில் சின்ன வெங்காயம் மட்டும் கிட்டத்தட்ட 80 சதவீத பங்கைக் கொண்டுள்ளது. 2024-25 ஆம் ஆண்டில், 0.44 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்ட சின்ன வெங்காயம் ஹெக்டேருக்கு சராசரியாக 12 டன் என்ற உற்பத்தித் திறனுடன், 5.28 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் திண்டுக்கல், திருப்பூர், பெரம்பலூர், திருச்சி, நாமக்கல், தேனி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்கள் இதன் முக்கிய உற்பத்திப் பகுதிகளாகும்.

உள்நாட்டுத் தேவை பெரும்பாலும் இப்பிராந்திய உற்பத்தியின் மூலமும், கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசத்திலிருந்து வரும் வரத்துகள் மூலமும் ஈடு செய்யப்படும். அதேவேளையில், தமிழ்நாடு ஒரு முக்கிய ஏற்றுமதி மையமாகவும் செயல்பட்டு, இலங்கை, வங்காளதேசம், மலேசியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளின் சந்தைகளுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. வர்த்தக வட்டாரங்களின்படி, நடப்பு பருவத்தில், சின்ன வெங்காயத்திற்கு, சர்வதேச அளவில் நல்ல தேவை இருப்பதால், மொத்த வெங்காய உற்பத்தியில் தோராயமாக 5 முதல் 10 சதவீதம் வரை ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போது பெரம்பலூர், தாராபுரம், பல்லடம், உடுமலைப்பேட்டை மற்றும் கர்நாடகா ஆகிய பகுதிகளில் இருந்து அறுவடை செய்யப்படும் புதிய சின்ன வெங்காய வரத்து, திருச்சி மற்றும் திண்டுக்கல்லில் உள்ள முக்கிய சந்தைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்தச் சூழலில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் 'உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம்' (DEMIC), கடந்த 15 ஆண்டுகளாக திண்டுக்கல் சந்தையில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலைகளை ஆய்வு செய்து, சந்தை ஆய்வுகளையும் மேற்கொண்டது. ஆய்வு களின் அடிப்படையில், தரமான சின்ன வெங்காயத்தின் சராசரி பண்ணை விலை அறுவடையின் போது கிலோவிற்கு ரூ.30 முதல் ரூ.35 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

மேலும் சந்தை விவரங்களுக்கு, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம், மற்றும் தொழில்நுட்ப விவரங்களுக்கு, பேரா சிரியர் மற்றும் தலைவர், காய்கறிப் பயிர்கள் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641003 தொடர்பு கொள்ளலாம்.

## உத்தராகண்டில் இருந்து ஈராக்கிற்கு முதன்முறையாக உருளைக்கிழங்கு வறுவல் ஏற்றுமதி

புது தில்லி, ஜூலை 20

உத்தராகண்ட் மாநிலம் உதம்சிங் நகர் மாவட்டத்தின் காசிபூரில் இருந்து ஈராக்கிற்கு முதன்முறையாக 24 மெட்ரிக் டன் உறை படுத்தப்பட்ட உருளைக்கிழங்கு வறுவல் ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளது. மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்ச கத்தின் வேளாண், பதனப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் இதற்கு ஏற்பாடு செய்துள்ளது. விருண் குளோபல் டிரேட் தனியார் நிறுவனம் சார்பில் இந்த ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது உத்தராகண்ட்டில் இருந்து மதிப்பு கூட்டப்பட்ட வேளாண் பொருட்களை ஏற்றுமதி செய்வ தற்கு ஊக்குவிப்பதில் முக்கிய நடவடிக்கையாக கருதப்படுகிறது. இப்பொருட்களின் தரம் சர்வதேச சந்தைகளுக்கு மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கும், நீண்டகால வர்த்தக உறவைப் பராமரிப் பதற்கும் உதவும் என்றும், இது நிறுவனத்திற்கும் பிராந்தியத் திற்கும் நீடித்த ஏற்றுமதி வாய்ப்புகளை அளிக்கும் என்றும் ஏற்றுமதியாளர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நெற்பயிரில் பாக்டீரியல் இலைக் கருகல் நோய் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள்

திருவள்ளூர், ஜுலை 20

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் வட்டாரப் பகுதிகளில் நெற்பயிரில் பாக்டீரியல் இலைக் கருகல் நோய் (Bacterial Leaf Blight) மற்றும் மைட்ஸ் (Spider Mites) தாக்குதல் அதிகளவில் காணப்படுகிறது.

### 1) பாக்டீரியல் இலைக் கருகல் நோயின் அறிகுறிகள்



இலை நுனி மற்றும் ஓரங்களில் மஞ்சள் நிறமாகத் தொடங்கி பின்னர் பழுப்பு நிறமாகக் கருகுதல், இலைகள் நீளவாக்கில் உலர்ந்து கருகுதல், அதிக பாதிப்பில் முழு இலைகளும் காய்ந்து மகசூல் பாதிக்கப்படுதல்.

### 2) மைட்ஸ் தாக்குதலின் அறிகுறிகள்

இலைகளில் வெண்மை அல்லது வெள்ளி நிறப் புள்ளிகள் தோன்றுதல், இலை நுனிகள் பழுப்பு நிறமாக மாறி சுருண்டு உலர்தல், அதிக தாக்குதலில் செடிகளின் வளர்ச்சி குறைந்து மகசூல் இழப்பு ஏற்படுதல்.

எனவே, பாதிப்பு தென்படும் வயல்களில் வேளாண் துறையின் பரிந்துரையின்படி தகுந்த பயிர் பாதுகாப்பு மருந்துகளை சரியான அளவில் பயன்படுத்தி நோய் மற்றும் பூச்சித் தாக்கத்தைக் கட்டுப்படுத்துமாறு அனைத்து விவசாயப் பெரு மக்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு : மீஞ்சூர், வேளாண்மை விரிவாக்க மையத்தினை அணுகலாம்.

Per acre: Omite (Propargite 57% EC) 300 ml + Bacterimycin 100 g + Cartap Hydrochloride 50% SP 400 g in 200 L of water.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# ஜவ்வாது மலையில் 26வது கோடைவிழா 2026

திருவண்ணாமலை, ஜுலை 20

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாதுமலையில் 26வது கோடை விழா 18.07.26 மற்றும் 19.07.26 இரண்டு நாட்கள் கொண்டாடப்பட்டது. இதில் பொதுப்பணித்துறை அமைச்சர், சுற்றுலாத்துறை அமைச்சர், போளூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சித் தலைவர், வேளாண்மை இணை இயக்குநர், வேளாண்மை துணை இயக்குநர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர், விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



கண்காட்சி அரங்கத்தை பார்வையிட்டபோது விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர், விவசாயி களுக்கு தரமான விதைகள் கிடைக்க செய்வதில் விதைப் பரிசோதனை நிலையங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றது என்பதை விளக்கி கூறினார். விதைப்பரிசோதனை நிலையத்தில் விதைகளின் தரத்தை உறுதிசெய்ய விதை மாதிரிகளுக்கு முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிற இரக கலவன் பரிசோதனைகள் மேற்கொள்ளள்பட்டு பகுப்பாய்வு முடிவுகள் உடனுக்குடன் அறிவுக்கப்படுகிறது என்பதை எடுத்துரைத்தார்.

விதைப்பரிசோதனை நிலையத்தில் ஆய்வு செய்யப்படும் மாதிரிகளின் வகைகளை எடுத்து சொன்னார். சான்று விதை மாதிரிகள் (Certification Sample) விதைச்சான்று மற்றும் உயர்மச் சான்றளிப்பு துறை உதவி இயக்குநர் மூலம் பெறப்படும் விதை மாதிரிகள், ஆய்வாரள் விதை மாதிரிகள் (Official Sample) விதை

ஆய்வாளர் மூலம் பெறப்படும் விதைமாதிரிகள், பணிவிதை மாதிரிகள் (Service Sample) விவசாயிகள் மற்றும் விதை விற்பனையாளர்கள் மூலம் பெறப்படும் விதை மாதிரிகள் ஆகிய மூன்று விதமான விதை மாதிரிகளை பற்றி எடுத்துரைத்தார். இதனால் விவசாயிகளுக்குத் தரமான விதைகள் கிடைப்பது மட்டு மன்றி போலி விதைகள் அங்கீகாரமற்ற விதைகள் விவசாயி களுக்கு செல்வதை தடுக்கப்படுகிறது என்பதை எடுத்துரைத்தார்.

மேலும் முளைப்புத்திறன் பரிசோதனை மூலம் பரிந்துரைக் கப்பட்ட விதை அளவை உபயோகப்படுத்துவதால் விதைச் செலவைக் குறைந்து கொள்வதுடன், கூடுதல் மகசூலும் விவசாயிகளுக்கு கிடைக்கும் என்பதையும் கூறினார். திருவண்ணாமலை மாவட்ட விதை பரிசோதனை அலுவலர் மடிப்புத்தாள் முறை, மணல் மேல் விதைப்பு முறை, தாள்களின் மேல் விதைப்பு முறை பயன் படுத்தி நெல், உளுந்து, நிலக் கடலை ஆகியவற்றை முளைப்புத்திறன் செய்து நேரில் விவசாயி களுக்கு பார்வைக்கு வைத்தியிருந்தார்கள். இந்த கோடை விழாவில் திருவண்ணாமலை மாவட்ட விவசாய பெருமக்களும், அருகில் உள்ள மாவட்ட விவசாய பெருமக்களும் பெரும் திரளாக கலந்து கொண்டு பயனடைந்தார்கள். திருவண்ணாமலை மாவட்டத்தில் ஜவ்வாது மலையில் நடைபெற்ற 26வது கோடை விழா இனிதாக நடைபெற்று நிறைவுற்றது.

# உளுந்து இரகம் வம்பன் 8 விற்பனைக்குள்ளது

திருச்சி, ஜுலை 20

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் செயல் பட்டு வரும் வேளாண்மை அறிவியல் நிலையம், சிறுகமணியில் உளுந்து இரகம் வம்பன் 8 சான்று நிலை (CS) விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு தயாராக உள்ளது. அது சமயம் தேவைப்படும் அனைவரும் அலுவலக வேலை நாட் களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நேரிலோ அல்லது பார்சலிலோ பெற்றுக் கொள்ளலாம். ஒரு கிலோ விதையின் விலை 120/-. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். 0431-2962854, 97156 26796, 99424 49786, 85088 35287.

மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரிவித்தார்.

# பருவ நிலைக்கேற்ற இயற்கை வேளாண்மை பயிற்சி



திருச்சி, ஜுலை 20

திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் கிரியா சூழல் மற்றும் வேளாண்மை ஆராய்ச்சி மையம், திருச்சி இணைந்து நடத்திய பருவநிலைக்கேற்ற இயற்கை வேளாண்மை பற்றிய களப் பயிற்சி 17.07.26 அன்று அந்தநல்லூர் வட்டாரம், கொடியாலம் கிராமத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய இணைப் பேராசிரியர் முனைவர் ராதிகா, பயிர் சாகுபடியில் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விளக்கினார்.

மேலும் அவர் பேசுகையில், இந்த ஆண்டு எல்நினோ தாக்கத்தின் காரணமாக பருவமழை தாமதமாகவோ குறை வாகவோ பெய்யலாம். இத்தகைய சூழ்நிலையை சமாளிக்க விவசாயிகள் முன்கூட்டியே திட்டமிட்டு செயல்பட வேண்டும். இயற்கை விவசாயம் செய்வதன் மூலம் மண் வளம் பாதுகாக்கப் படுவதோடு நீர் பிடிப்பு தன்மையும் அதிகரிக்கும். எனவே விவசாயிகள் இயற்கை வேளாண்மையை கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தினார்.

மேலும் இயற்கை வேளாண்மையின் குறிக்கோள்கள், இயற்கை வேளாண் இடுபொருட்களின் பயன்பாடு மற்றும் பஞ்சகாவியா, மீன் அமிலம், முட்டை கரைசல், ஜீவாமிர்தம் போன்றவற்றின் தயாரிப்பு பற்றிய செயல் விளக்கம் அளிக்கப் பட்டது.

இணைப் பேராசிரியர் முனைவர் கண்ணன், இயற்கை வேளாண்மை முறையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகளான வேப்பங்கொட்டை கரைசல் மற்றும் 3 G கரைசல் குறித்து எடுத்துரைத்தார்.

கிரியா சூழல் மற்றும் வேளாண்மை ஆராய்ச்சி மையத்தின் நிறுவனர் முனைவர் சிவபாலன், மண்வள மேம்பாடு மற்றும் மண் ஆய்வு செய்வதன் முக்கியத்துவம் குறித்து அறிவுறுத்தினார். விவசாயிகளுக்கு இயற்கை வேளாண் இடுபொருள்களான மண்புழு உரம் மற்றும் உயிர் உரங்கள் வழங்கப்பட்டன.

மேலும் மண்புழு உரம் தயாரிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வண்ணம் துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது.

இப்பயிற்சியில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# மண் புழு உரம் உற்பத்தி - ஒரு பார்வை



**அறிமுகம்**

இன்றைய காலகட்டத்தில் மண்ணின் வளத்தைப் பாது காப்பதும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதும் மிகவும் அவசியமா கிறது. அதிகளவில் இரசாயன உரங்களைப் பயன் படுத்துவதால் மண்ணின் இயற்கை வளம் குறைந்து, சுற்றுச்சூழல் பாதிக்கப் படுகிறது. இதற்கு மாற்றாக இயற்கை முறையில் தயாரிக்கப்படும் மண்புழு உரம் ஒரு சிறந்த இயற்கை உரமாகும். மண் புழுக்களின் உதவியுடன் தாவர மற்றும் விலங்கு கழிவுகளை சிதைத்து தயாரிக்கப்படும் உரமே மண் புழு உரம் எனப்படுகிறது.

**மண்புழு உரம் என்றால் என்ன?**

மண்புழுக்கள் கரிமக்கழிவுகளை உண்டு, அவற்றைச் செரிமானம் செய்து வெளியேற்றும் கழிவுப்பொருள் மண்புழு உரமாகும். இதில் தாவரங்களுக்கு தேவையான முக்கிய ஊட்டச் சத்துக்கள் மற்றும் நன்மை தரும் நுண்ணுயிரிகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

**தேவையான பொருட்கள்**

மண்புழு உரம் தயாரிக்க பின்வரும் பொருட்கள் தேவைப் படுகின்றன.

- மாட்டு சாணம்
- பயிர் கழிவுகள்
- காய்கறி மற்றும் பழக்கழிவுகள்
- உலர்ந்த இலைகள்
- மண் புழுக்கள்
- நீர்
- நிழலான இடம்
- உரம் தயாரிக்கும் தொட்டி அல்லது படுக்கை

**மண்புழு உரம் தயாரிக்கும் முறை**

**1. இடம் தேர்வு**

மண்புழு உரம் தயாரிக்க நிழலான, குளிர்ச்சியான மற்றும் நீர்தேங்காத இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நேரடி சூரிய ஒளி மற்றும் அதிக மழையிலிருந்து மண்புழு படுக்கையைப் பாதுகாக்க வேண்டும்.

**2. படுக்கை அமைத்தல்**

முதலில் தரையில் அல்லது தொட்டியில் உலர்ந்த இலைகள், வைக்கோல் மற்றும் பயிர் கழிவுகளை ஒரு அடுக்காகப் பரப்ப வேண்டும். அதன் மேல் ஓரளவு ஈரப்படுத்தப்பட்ட மாட்டு சாணத்தைப் போட வேண்டும்.

**3. கரிமக் கழிவுகளைச் சேர்த்தல்**

காய்கறிக் கழிவுகள், பழக்கழிவுகள் மற்றும் பயிர் கழிவுகளை சிறு துண்டுகளாக நறுக்கி படுக்கையில் சேர்க்க வேண்டும். புதிய மாட்டு சாணத்தை நேரடியாக அதிகளவில் பயன்படுத்தக் கூடாது. அது முன்கூட்டியே ஓரளவு மக்கச் செய்யப்பட வேண்டும்.

**4. மண்புழுக்களை விடுதல்**

தயாரிக்கப்பட்ட கரிமக்கழிவுகளின் மீது மண்புழுக்களை விடவேண்டும். பொதுவாக Eisenia fetida போன்ற மண்புழு இனங்கள் மண்புழு உரம் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்றன.

**5. ஈரப்பதத்தை பராமரித்தல்**

மண்புழுக்கள் நன்றாக செயல்படுவதற்கு சரியான ஈரப்பதம் அவசியம். படுக்கை அதிகமாக உலராமல், அதே நேரத்தில் நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தேவையான போது சிறிதளவு நீர் தெளிக்க வேண்டும்.

**6. பராமரிப்பு**

மண்புழு படுக்கையை நேரடி சூரியஒளி, அதிக மழை மற்றும் அதிக வெப்பத்திலிருந்து பாதுகாக்க வேண்டும். படுக்கையை அடிக்கடி கிளறக் கூடாது. ஏனெனில் அது மண்புழுக்களின் செயல்பாட்டை பாதிக்கலாம்.

**மண்புழு உரம் அறுவடை**

பொதுவாக 45 முதல் 60 நாட்களுக்குள் கரிமக்கழிவுகள் நன்கு சிதைந்து மண்புழு உரமாக மாறும். உரம் கருமை நிறமாகவும், மிருதுவாகவும், மண் போன்ற மணத்துடனும் இருக்கும். மண்புழுக்களை உரத்திலிருந்து பிரித்து, உரத்தை சேகரித்து நிழலில் உலர்த்தி பயன்படுத்தலாம்.

### மண்புழு உரத்தின் நன்மைகள்

● மண்ணின் வளத்தை அதிகரிக்கிறது.
● தாவர வளர்ச்சியை மேம்படுத்துகிறது.
● மண்ணின் நீர்ப்பிடிப்புத் திறனை அதிகரிக்கிறது.
● மண்ணில் நன்மை தரும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கிறது.
● இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைக்கிறது.
● வேளாண் கழிவுகளை பயனுள்ள உரமாக மாற்றுகிறது.
● சுற்றுச்சூழலுக்கு உகந்தது.
● விவசாயிகளுக்கு கூடுதல் வருமானத்தை வழங்குகிறது.

### முடிவுரை



மண்புழு உரம் இயற்கை விவசாயத்திற்கு மிகவும் பயனுள்ள ஒரு சிறந்த இயற்கை உரமாகும். வேளாண் கழிவுகளைச் சரியான முறையில் பயன் படுத்தி மண்புழு உரம் தயாரிப்பதன் மூலம் மண்ணின் வளத்தைப் பாதுகாக்கலாம். எனவே, நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வேளாண் மைக்காக மண்புழு உர உற்பத்தியை ஊக்குவிப்பது மிகவும் அவசியமாகும்.

தகவல் : **சி.பிரசாத், (மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல்) நான்காம் ஆண்டு மாணவர்கள், கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, மதுரை – 625 532.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# சீமைக்கருவேல் இல்லாத மாவட்டமாக விருதுநகரை மாற்றும் பணி தீவிரம்?



ஒரு காலத்தில் வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட அன்னிய விதை தான் சீமைக்கருவேல். இன்றும் எங்கும் நீக்கமற நிறைந்து வறட்சி யிலும் செழிப்பாக வளர்ந்து வரு வதை அகற்றும் பணியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் அனைத்து துறைகளின் பங்களிப்புடன் கூட்டு முயற்சியில் 15.7.26யன்று இறங்கியுள்ளது. (MASS ERADICATION OF PROSOPIS JULIFLORA) அதை பற்றி விரிவாக பார்க்கும் முன்பு சீமைக்கருவேல் தாவரத்தை பற்றி தெரிந்து கொள்ளுவோம்.

**சீமைக்கருவேல் வரமா? சாபமா?**

இது என்ன பட்டிமன்ற தலைப்பு மாதிரியாக உள்ளதே என நீங்க நினைப்பது எனக்கு தெரியும். ஒரு காலத்தில் எரிபொருள் (FUEL) தட்டுபாட்டை தவிர்க்க தென்அமெரிக்காவில் அறிமுகப் படுத்தப்பட்ட அன்னிய நாட்டு தாவரம். இது கடந்த 1820யில் அறிமுகப்படுத்த பட்டாலும் இதனுடைய வளர்ச்சி 1970-1990யில் தமிழகத்தில் பட்டி தொட்டிகளில் எல்லாமே பரவியது. வறட்சியிலும் பசுமையான தாவரமாக இருந்தது. சாகுபடி பயிருக்கு வேலியாக இதனை அமைத்தால் இது வேலி கருவேல் என்றும் அழைக்கப்பட்டது. இது பலருக்கு வேலை வாய்ப்பு (அடுப்பு கரி) தயாரிப்பில் உதவியது. பின்தங்கிய மாவட்டங்களான சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாக இருந்த போது இது வரமா தெரிந்தது. இன்றைய கால கட்டத்தில இது சாபமா 'நிலத்தடி நீரை ஊறிஞ்சும் மரமாக பார்க்கப்படுவதுடன் நச்சு வாயுக் களை உற்பத்தி செய்யும் மரமாகவும் எந்த ஒரு பறவை இனம் கூட கூடு கட்டுவதற்கு இலாக்கயற்றமரமாக உள்ளது. இதனுடைய தேவைபடிப்படியாக குறைந்த நிலையில் இதனுடைய தீமைகளின் அளவு அதிகமாக உள்ளதால் இதனை வேரோடு அழிக்க இயந்திரங்கள் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**சீமைக்கருவேல் மரத்தின் தன்மை :** இது ஒரு ஆக்கிரமிப்பு தாவர இனமாகும். இதனுடைய கட்டுப்பாடற்ற பரவல் காரணமாக நம்முடைய பாரம்பரிய பூர்வீக தாவர இனங்களை அழித்ததுடன் அல்லாமல் உயிரின பன்முகத் தன்மையையும் பாதிக்க பட  செய்கிறது. மேலும் நிலத்தின் இயற்கை வளம் மற்றும் உற்பத்தி திறன் குறைவ தோடு மேய்ச்சல் நிலங்கள், விவசாய நிலங்கள், நீர்நிலைகள் மற்றும் அரசு புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிக்கபடு கின்றன.  இதனால் சுற்றுப்புற சூழல் சமநிலை பாதிக்கப்படு வதுடன் நில மீட்பு மற்றும் பசுமை மேம்பாட்டிற்கு பெரும் இடையூறாக உள்ளது என்பது மிகையல்ல.

**விருதுநகர் செழுமை கருவூலம்? :** சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புகளின்படி, தமிழக அரசின் ஆக்கிரமிப்பு தாவரங்கள் மற்றும் சுற்றுப்புற சூழல் மறு சீரமைப்புக் கொள்கைக்கு (TNPIPER) ஆகியவற்றின் அடிப்படையில் 'விருதுநகர் மாவட் டத்தில் செழுமை கருவூலம்' என்ற சிறப்பு முன்முயற்சியின்கீழ், அரசு நிலங்கள்  மற்றும் வளாகங்களில் உள்ள சீமைக் கருவேல் மரங்களை முழுமையாக வேருடன் அகற்றி அந்த இடத்துல பூர்வீக மர இனங்களை நடவு செய்து சுற்றுப்புற சூழலை மீட்டெடுக்கும் பணிகளில் பல்வேறு துறைகளுடன் செயல்படுத்தபட்டு வருகிறது. இது அரசு நடவடிக்கையாக மட்டுமல்லாமல், மக்கள் இயக்கமாக மாறவேண்டும் என்பதே மாவட்ட நிர்வாகத்தின் நோக்கமாகும்.

**மின்னஞ்சல் முகவரி :** எனவே விவசாயிகள், நில உரிமை யாளர், தொழில் கல்வி நிறுவனங்கள் பொதுமக்கள் தங்க ளுடைய சொந்த நிலங்களில் உள்ள சீமைக்கருவேல் மரங் களை வேருடன் அகற்றி, அதற்கு பதிலாக பூர்வீக மரங்கள் (வேம்பு, புங்கன்) நட வேண்டுமென கூறப்பட்டுள்ளது. இது குறித்த நிகழ்வுகளை புகைபடமாக எடுத்து (BEFORE & AFTER) உள்ளிட்ட விவரங் களை (selmaikaruvoolamvnr@gmail.com) என்ற மின்னஞ்சல்  முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

அனைத்து பங்களிப்புகளையும் மாவட்ட நிர்வாகத்தில் பாராட் டப்பட்டு மாவட்ட அளவில் முன்மாதிரியாக எடுத்து கொள்ளப் படுமென மாவட்ட ஆட்சியரின் அறிக்கை தெரிவிக்கிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பெரியாக்குறிச்சி கிராமத்தில் நிலக்கடலை விதைப்பண்ணை திட்டத்தில் ஆய்வு



அரியலூர், ஜூலை 20

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டாரத்தில் பெரியாக்குறிச்சி கிராமத்தில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் உலகம்மை முருகக்கனி, அசோகன் என்பவரின் நிலக்கடலை வி.ஆர்.ஐ 10 இரகம் சொட்டுநீர் பாசனத்தில் 4 ஏக்கர் பரப்பளவில் விதைப்பண்ணை வயலை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது விவசாயிடம் விதைப்பு தேதி, நிலக்கடலை நுண்ணூட்டம் இடுதல், உர மேலாண்மை, நீர் மேலாண்மை, களை நிர்வாகம் ஆகியவற்றை வேளாண்மை இணை இயக்குநர் கேட்டறிந்து அதற்குரிய தொழில்நுட்பங்களான நிலக்கடலை நுண்ணூட்டம் எக்டருக்கு 12.5 கிலோவும் இரண்டாவது களை எடுக்கும் போது (45ம் நாள்) 200 கிலோ ஒரு எக்டருக்கு ஜிப்சம் இடவும், நிலக்கடலை பயிரில் ஏற்படும் வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்த டி.விரிடி ஒரு எக்டருக்கு 1250 கிராம் சொட்டு நீர் பாசனத்தில் கரைசலாக இடவும். நிலக்கடலை திடமான முதிர்ச்சி அடைய நிலக்கடலை ரிச் ஏக்கருக்கு 2 கிலோ 15 நாள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்குமாறும் மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்தான டி.ஏ.பி 2.5 கி, அம்மோனியம் சல்பேட் 1 கி, போரான் 500 கிராம், பிளானோபிக்ஸ் 150 மிலி 37 லிட்டர் நீரில் ஊறவைத்து தெளிந்த நீரை 500 லிட்டர் நீரில் கலந்து 1 ஹெக்டேருக்கு தெளிப்பதன் மூலம் அதிக மகசூல் பெறலாம் என ஆலோசனைகள் வழங்கினார்.

இந்த ஆய்வில் செந்துறை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தி, வேளாண்மை அலுவலர் சுகந்தி, உதவி விதை அலுவலர் கொளஞ்சி மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் மலர்கொடி ஆகியோர் உடனிருந்தனர்,

# வேளாண் கல்லூரி இறுதி ஆண்டு மாணவர்களுக்கு தொழில்முனைவோர் ஆற்றுப்படுத்துதல் நிகழ்ச்சி

சிவகங்கை, ஜூலை 20

சிவகங்கை மாவட்டத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் சிவகங்கை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் செட்டிநாடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நான்காம் ஆண்டு



வேளாண்மை கல்லூரி மாணவர்களுக்கான தொழில் முனைவோர் ஆற்றுப்படுத்துதல் பயிற்சி (20.07.26) இன்று செட்டிநாடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியினை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர், (வேளாண் வணிகம்) மு.சுமதி வரவேற்புரையாற்றி தொடங்கி வைத்தார்கள். முனைவர் சு.பாபு, முதன்மை அலுவலர், செட்டிநாடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் முனைவர் று.பேபிராணி, சேது பாஸ்கரா வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதல்வர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகம் (TNAPEX), தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARAD), மாவட்ட தொழில் மையம் (DIC) மற்றும் வெற்றிகரமாக இயங்கி வரும் வேளாண் தொழில்முனைவோர் ஆகியோர் கலந்து கொண்டு தொழில்நுட்ப உரையாற்றி மாணவர்களின் சுயதொழில் ஆர்வத்தை ஊக்குவித்தனர்.

TNAPEX நிறுவனத்தின் முதுநிலை மேலாளர் தீபன் சக்கரவர்த்தி, வேளாண் விளைபொருட்களை பதப்படுத்துதல் மற்றும் பதப்படுத்தப் பட்ட உணவுப் பொருட்களுக்கான ஏற்றுமதி வாய்ப்பு பற்றிய விரிவான விளக்கங்களை அளித்துள்ளார்கள்.

NABARAD வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் அனீஸ்குமார், வேளாண் சார்ந்த தொழில்களை தொடங்குவதற்கு தேவைப்படும் கடன் உதவிகள், வங்கி சலுகைகள் மற்றும் நிதி சார்ந்த திட்டங்கள் பற்றித் தெளிவுபடுத்தினார்கள்.

மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் கிருஷ்ணன் மற்றும் பொறியாளர் புதிய தொழில் முனைவோருக்குச் சுயதொழில் தொடங்க அரசு வழங்கும் பல்வேறு நலத் திட்டங்கள், மானியங்கள் குறித்து எடுத்துரைத்தார்கள். சிவகங்கை மாவட்டத்தில் வெற்றி கரமாக இயங்கிவரும் வேளாண் தொழில் முனைவோர் அழகரசன், வேளாண் பட்டதாரிகளுக்கு தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். மேலும் தொழில் தொடங்குவதில் வரும் சவால்களை கடந்து வெற்றிகரமாகச் செயல்படுத்துவது பற்றி எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் 2 வேளாண்மை கல்லூரிகளின் போராசிரியர் களும் 125 மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, வேளாண்மை அலுவலர் கோ.கனிமொழி மரகதம் மற்றும் உதவி, வேளாண்மை அலுவலர் மு.முகமது அல் அமீன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# நவீன வேளாண்மையில் வறட்சிக்கு உதவும் தென்னை நார் கழிவுகள்

கடும் வறட்சி காரணமாகத் தென்னைநார்க் கழிவுத் துகள்களின் தேவை அதிகரித்துள்ளது. பொள்ளாச்சிப் பகுதியில் இருந்து முதன் முறையாகத ஆப்பிரிக்காவுக்கு இக்கட்டிகள் ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன. தென்னை நகரான பொள்ளாச்சிப் பகுதியில் சுமார் ஒரு கோடி தென்னை மரங்கள் உள்ளன. கடந்த ஆண்டு தென்மேற்கு வடகிழக்குப் பருவமழைகள் பொய்த்து விட்டன. இதனால் பொள்ளாச்சிப் பகுதியில் மட்டும் 20 சதவீத தென்னை மரங்கள் முழுமையாகக் காய்ந்துவிட்டன. மேலும் 20 சதவீதத்துக்கு மேற்பட்ட மரங்கள் காய்க்கும் திறனை இழந்துவிட்டன.

பொள்ளாச்சிப் பகுதியில் சில ஆண்டுகளாகத் தென்னை மட்டையில் இருந்து தயாரிக்கப்படும் நார் மற்றும் தென்னை நார்க் கழிவுத்துகள் கட்டிகளின் ஏற்றுமதி அதிகரித்து வருகிறது. இப்பகுதியில் மட்டும் சுமார் 500க்கு மேற்பட்ட தென்னைநார்த் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

நாளொன்றுக்கு ஒரு தொழிற்சாலைக்கு சுமார் 40 ஆயிரம் மட்டைகள் தேவைப்படுகின்றன. ஏற்றுமதி அதிகரிப்பதால் மட்டை களின் தேவையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தேவை அதிகரித்தால் கடந்த 6 மாதங்களுக்கு முன் 50 பைசாவுக்கு விற்ற தென்னை மட்டை இப்போது ரூ.2 ஆக விலை உயர்ந்துள்ளது.

இங்குத் தென்னை மட்டை கிடைக்காத காரணத்தால் கேரளம் கர்நாடக மாநிலங்களில் இருந்து தினமும் 20 லோடு முதல் 40 லோடுவரை தென்னை மட்டைகள் கொண்டு வரப்படுகின்றன. பொள்ளாச்சியில் இருந்து கொரியா ஐரோப்பா அமெரிக்கா ஆஸ்திரேலியா மத்திய கிழக்கு நாடுகளுக்கு அதிகளவில் தென்னை நார்க் கழிவுத்துகள் கட்டிகள் ஏற்றுமதி செய்யப் படுகின்றன.

முதன்முறையாக இந்த ஆண்டு பொள்ளாச்சியில் இருந்து ஆப்பிரிக்காவுக்கும், கழிவுத்துகள் கட்டிகள் ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன. வீடுகளின் மாடிகளில் காய்கறித் தோட்டம் அமைக்கு மாறு தமிழக அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. வீடுகளின் மாடியில் தோட்டம் அமைக்கும் பகுதியில் கழிவுத்துகள் கட்டிகளை மண்ணுடன் கலந்து பயிரிடுவதால் மகசூல் அதிகரிப்பதுடன் தண்ணீரின் தேவையும் குறைகிறது. இதனால் கழிவுத்துகள் கட்டிகளின் தேவை அதிகரித்துள்ளது.

மேலும் வறட்சியால் வாடும் தென்னை மரங்களைத் காப்பாற்று

வதற்காக மரத்தைச் சுற்றிலும் இக்கழிவுத்துகள்களைப் பரப்பு கின்றனர். இதனால் தினமும் தென்னை மரத்துக்குத் தண்ணீர் விடுவதற்குப் பதிலாக 4 அல்லது 6 நாள்களுக்கு ஒரு முறை தண்ணீர் விட்டால் போதுமானதாக இருப்பதாக விவசாயிகள் கூறு கின்றனர். தண்ணீரைச் சேமிக்க வேண்டுமானால் கழிவுத் துகள் கட்டியைப் பயன்படுத்துங்கள் என்ற முழக்கம் இப்போது புதிதாகப் பொள்ளாச்சியில் உள்ள கழிவுத்துகள் கட்டி உற்பத்தியாளர்களிடம் எழுந்துள்ளது. ஒரு கிலோ கழிவுத்துகள் கட்டி 8 கிலோ தண்ணீரைத் தன்னுள் தாங்கும் இதனால் தென்னை மரததைச் சுற்றிலும் ஈரம் இருந்து கொண்டே இருக்கும். அதற்காகவே கடந்த சில ஆண்டு களாக விவசாயிகள் வறட்சியின் போது கழிவுத்துகள் களைத் தென்னை மரத்தின் வேரை சுற்றிலும் பரப்பி ஆயுள் காலப்பயிரான தென்னையைக் காப்பாற்றி வந்தனர். பொள்ளாச்சிப் பகுதியில் இருந்து மட்டும் தென்னை நார்க் கழிவுத்துகள்கள் கட்டி ரூ.250 கோடிக்கு மேல் ஏற்றுமதியாகிறது. உடுமலைப்பேட்டை, மடத்துக் குளம் வட்டாரம் அரவிந்த், தென்னை நார் கழிவு கட்டிக்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார். தொடர்புக்கு : 99408 00066.

***தகவல் :*** *யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.*

## வேளாண் துறையின் தரக்கட்டுபாட்டு விழிப்புணர் பணிகள் குறித்து சட்டமன்ற உறுப்பினருக்கு எடுத்துரைத்த வேளாண் உதவி இயக்குனர்



அரியலூர், ஜுலை 20

அரியலூர் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர், தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், ஜெயங்கொண்டம் சட்ட மன்ற உறுப்பினர் வைத்தியலிங்கத்தை நேரில் சந்தித்து, விவசாயிகளின் நலனை முன்னிறுத்தி மேற்கொள்ளப்பட்ட வரும் தரக் கட்டுப்பாட்டு விழிப்புணர் பணிகள் குறித்து எடுத்துரைத்தார். உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்கள் தரத்தை உறுதி செய்தல், போலி மற்றும் தரமற்ற பொருட்களின் விற்பனையை தடுக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், விவசாயி களுக்கு வழங்கப்பட்டு வரும் ஆலோசனைகள், உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து விளக்கம் அளித்தார். கவனமாக கேட்டுக் கொண்ட சட்டமன்ற உறுப்பினர், விவசாயிகள் நலனுக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வரும் வேளாண்மை துறையின் பணிகளை பாராட்டி அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். விவசாயிகளுக்கு தரமான வேளாண் இடுபொருள், கிடைப்பதை உறுதி செய்யும் தரக்கட்டுப்பாட்டு பணிகள் மாவட்ட வேளாண்மை வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது, என்பதும் சந்திப்பில் வலியுறுத்தப்பட்டது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மக்காச்சோளத்தில் படைப்புழு மேலாண்மை பற்றிய வெளிவளாக பயிற்சி



கடலூர், ஜுலை 20

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம், சார்பாக மக்காச்சோளத்தில் படைப்புழு மேலாண்மை பற்றிய வெளிவளாக பயிற்சி 20.07.26 அன்று மங்களூர் வட்டாரம், ஆவட்டி கிராமத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன், வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முக்கிய குறிக்கோள்கள் மற்றும் அதிக மகசூல் தரும் உயர் தர இரகங்கள் பற்றியும், விதை உற்பத்தி செய்யும் முறைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். விவசாயிகளுக்கு மக்காச்சோளத்தில் படைப் புழு மேலாண்மை பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.

மக்காச்சோள பயிருக்கு ஒவ்வொரு 10 வரிசைக்கும் 75 செ.மீ இடைவெளி விடவேண்டும். இதனால் பூச்சிகொல்லி தெளிப் பதற்கு ஏதுவாக அமையும், மேலும் வரப்பு பயிராக கம்பு நேப்பியர் பயிர் செய்யவும், ஊடுப்பயிராக உளுந்து மற்றும் பச்சை பயிறு செய்யுமாறும் மற்றும் படைப்புழுக்களை கவர்ந்து இழுக்கும் இனக்கவர்ச்சி பொறி வைக்குமாறும் வலியுறுத்தினார். மேலும் ஒருங்கிணைந்த பயிர் பராமரிப்பு மற்றும் ஒருங் கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை பற்றியும் விவசாயி களுக்கு விளக்கமாகவும், செயல் முறையாகவும் காண்பிக்கப் பட்டது.

வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) மங்களூர், உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் தனுக்கா உர நிறுவனமும் இணைந்து இப்பயிற்சியை ஒருங்கிணைந்து நடத்தினர். இறுதியாக விவசாயிகள், வேளாண் விஞ்ஞானிகளிடம் தனது ஐயங்களை கேட்டு தெளிவு பெற்றனர்.

இப்பயிற்சியில் கடலூர் மாவட்ட மங்களூர் வட்டாரம், ஆவட்டி கிராமத்தில், உள்ள விவசாயிகள் 60-க்கும் மேற்பட்டோர் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

# பயிர் காப்பீடு திட்டத்தில் காப்பீடு செய்ய அழைப்பு!

புதுக்கோட்டை, ஜூலை 20

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டாரத்தில் இயற்கை சீற்றங்களால் ஏற்படும் இழப்பிலிருந்து நிலக்கடலை பயிர்களை பாதுகாக்க பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது.

பூவற்றக்குடி,அரசர்குளம், நாகுடி, சிலட்டூர் சரக விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யலாம். இத் திட்டத்தின் கீழ் கடன் பெறும் விவசாயிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலோ விருப் பத்தின் பெயரில் பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம்.

கடன் பெறாத விவசாயிகள் தங்கள் அருகாமையில் உள்ள பொது சேவை மையங்கள் மூலமாகவோ அல்லது சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலோ, பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம். நிலக்கடலை பயிருக்கு ஏக்கருக்கு ரூ.596 காப்பீட்டு பிரீமியம் கட்டணமாக நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது.

காப்பீடு செய்ய நடப்பு ஜூலை மாதம் 31ஆம் தேதி கடைசி நாள் ஆகும். இத்திட்டத்தில் பதிவு செய்யும் விவசாயிகள் கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் நடப்பு 1436 பசலிக்கான அடங்கல் வங்கி கணக்கு புத்தகத்தின் முன்பக்க நகல் ஆதார் அட்டை நகல் ஆகியவற்றுடன் பிரீமியம் கட்டணத்தை செலுத்தி அதற்கான ரசீதை பெற்றுக் கொள்ளலாம். இத்திட்டம் குறித்த கூடுதல் விபரங்களுக்கு தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர், உதவி தோட்டக்கலை அலுவலர் அல்லது வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டு பயிர் காப்பீடு செய்து பயன்பெறுமாறு வேளாண்மை உதவி இயக்குனர் அறந்தாங்கி கேட்டுக் கொண்டுள்ளார்.



# தென்னை சாகுபடியில் போரான் (Boron) சத்துக் குறைபாடு



போரான் என்பது தென்னை மரத்தின் வளர்ச்சி, பூப்பிடித்தல், காய் பிடித்தல் மற்றும் ஊட்டச்சத்து கடத்தல் போன்ற செயல்பாடுகளுக்கு மிகவும் அவசியமான நுண்ணூட்டச் சத்தாகும். இந்தச் சத்து குறைந்தால் மரத்தின் வளர்ச்சியும் மகசூலும் குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கப்படும்.



போரான் என்பது தென்னை மரத்தின் வளர்ச்சி, பூப்பிடித்தல், காய்ப் பிடித்தல் மற்றும் ஊட்டச்சத்து கடத்தல் போன்ற செயல்பாடுகளுக்கு மிகவும் அவசியமான நுண்ணூட்டச் சத்தாகும். இந்தச் சத்து குறைந்தால் மரத்தின் வளர்ச்சியும் மகசூலும் குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கப்படும்.

**போரான் குறைபாடு ஏற்படும் முக்கிய காரணங்கள்**

- மண்ணில் இயற்கையாகவே போரான் சத்து குறைவாக இருப்பது.
- அதிக மழை அல்லது அதிகப்படியான நீர்ப்பாசனத்தால் போரான் கரைந்து வெளியேறுவது.
- சமநிலையற்ற உரமிடல் (நைட்ரஜன், பொட்டாசியம் அதிகம் ; போரான் குறைவு).
- மண்ணின் pH அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருப்பது.
- வேர்சேதம், வேர் அழுகல் நோய் அல்லது நூற்புழு தாக்குதல்.
- மணல் மண் மற்றும் குறைந்த கரிமப்பொருள் கொண்ட மண்.

**போரான் குறைபாட்டின் அறிகுறிகள்**

**இலைகளில்**

- இளம் இலைகள் வெளிறி மஞ்சள் நிறமாக மாறுதல்.
- இலை நுனி மற்றும் ஓரங்கள் பழுப்பு நிறமாகக் கருகுதல்.
- இலைகள் சுருங்கி, மடங்கி அல்லது வளைந்து காணப்படுதல்.
- புதிய இலைகள் சரியாக விரியாமல் இருப்பது.

**பூ மற்றும் காய்களில்**

- பூக்கள் குறைவாக உருவாகுதல்.
- பூக்கள் சீரற்ற வளர்ச்சி அடைதல்.
- காய்பிடிப்பு குறைதல்.
- சிறிய, வடிவம் மாறிய தேங்காய்கள் உருவாகுதல்.
- இளம்காய்கள் உதிர்தல்.



**வளர்ச்சியில்**

- நுனி மொட்டு பாதிப்பு அல்லது இறப்பு.
- புதிய வளர்ச்சி தடைபடுதல்.
- கிளைகள் காய்ந்து போதல்.
- வேர் வளர்ச்சி குறைதல்.

**போரான் குறைபாட்டால் ஏற்படும் பாதிப்புகள்**

- மர வளர்ச்சி குறையும்.
- மகசூல் கணிசமாகக் குறையும்.

● தேங்காயின் தரம் பாதிக்கப்படும்.

● வறட்சி மற்றும் பிற சுற்றுச்சூழல் அழுத்தங்களைத் தாங்கும் திறன் குறையும்.

● இனப்பெருக்கத் திறன் குறைந்து காய் உற்பத்தி பாதிக்கப்படும்.

● மற்ற ஊட்டச் சத்துக்களின் பயன்பாடும் பாதிக்கப்படும்.

**போரான் குறைபாட்டை நிர்வகிக்கும் முறைகள்**

**1. நிவர்த்தி செய்யும் முறைகள் மண்வழியாக**

மண் பரிசோதனை அடிப்படையில் போராக்ஸ் அல்லது போரிக் அமிலம் பயன்படுத்த வேண்டும்.



● அளவுக்கு அதிகமாக பயன்படுத்தக் கூடாது; அதிக போரானும் நச்சுத் தன்மையை ஏற்படுத்தும்.

● ஒரு மரத்திற்கு வருடத்திற்கு 50 கிராம் போராக்ஸ் அல்லது 20 கிராம் சோடியம் டெட்ராபோரேட் என்றளவில், மரத்தைச் சுற்றி அரைவட்ட குழி எடுத்து இட வேண்டும். மரத்தின் தூரிலிருந்து 3 முதல் 4 அடி தள்ளி அரை வட்டக் குழிகளில் இட்டு மண்ணால் மூடி விட வேண்டும். இதை வருடத்திற்கு ஒரு முறை செய்யலாம்.

**2. நிவர்த்தி செய்யும் முறைகள் இலைவழித் தெளிப்பு வழியாக**

● போரான் கரைசலை இலைகளில் தெளிப்பதன் மூலம் விரைவாகச் சத்து கிடைக்கும்.

● பூக்கும் மற்றும் காய்பிடிக்கும் காலங்களில் தெளிப்பது சிறந்தது.

● போரான் பற்றாக்குறை அதிகமாக இருந்தால், 200 கிராம் போராக்ஸ் அல்லது 100 கிராம் டிசோடியம் ஆக்டாபோரேட் டெட்ரா ஹைட்ரேட் உரத்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து இலைகளின் மீது தெளிக்கலாம்.

**3. சமச்சீர் உரமிடல்**

● நுண்ணூட்டச் சத்துகள் அடங்கிய முழுமையான உரங்களைப் பயன்படுத்த வேண்டும்.

● நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் மற்றும் நுண்ணூட்டச் சத்துகளின் சமநிலையைப் பேண வேண்டும்.

**4. கரிமப்பொருட்கள் சேர்த்தல்**

● தொழு உரம், மக்கிய உரம், கம்போஸ்ட் போன்றவற்றைச் சேர்ப்பதால் போரான் கிடைப்புத் தன்மை அதிகரிக்கும்.

● மண்ணின் CEC மற்றும் ஈரப்பதத் தாங்கும் திறனும் மேம்படும்.

**5. மண் pH பராமரிப்பு**

● pH 6.0 - 7.0 உள்ள மண்ணில் போரான் சிறப்பாகக் கிடைக்கும்.

● தேவைக்கேற்ப சுண்ணாம்பு அல்லது பிற திருத்திகளைப் பயன்படுத்தலாம்.

**6. மூடாக்கு (Mulching)**

● தேங்காய் மட்டை, இலைகள், பயிர்க் கழிவுகள் போன்றவற்றை மூடாக்காகப் பயன்படுத்தி மண்ணின் ஈரப்பதத்தையும் ஊட்டச் சத்துகளையும் பாதுகாக்கலாம்.

**7. ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை (INM)**

● கரிம உரங்கள், உயிர் உரங்கள், நுண்ணுயிர் ஊக்கிகள் மற்றும் இரசாயன உரங்களைச் சமநிலையாகப் பயன்படுத்த வேண்டும்.

**8. தொடர்ந்து கண்காணித்தல்**

● மண் பரிசோதனை மற்றும் இலைப் பகுப்பாய்வு மூலம் போரான் அளவை கண்காணிக்க வேண்டும்.

● ஆரம்ப நிலையிலேயே குறைபாட்டைக் கண்டறிந்து சரி செய்வது அதிக மகசூலை உறுதி செய்யும்.

போரான் என்பது தென்னை மரத்தின் வளர்ச்சி, பூப்பிடித்தல், காய் உருவாக்கம் மற்றும் மகசூலுக்கு இன்றியமையாத நுண்ணூட்டச் சத்தாகும்.

மண் பரிசோதனை அடிப்படையில் சரியான அளவில் போரான் வழங்குதல், சமச்சீர் உரமிடல், கரிமப் பொருட்கள் சேர்த்தல், மண் pH பராமரித்தல் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் போரான் குறைபாட்டை திறம்படக் கட்டுப்படுத்தி, ஆரோக்கியமான தென்னை மரங்களையும் அதிக மகசூலையும் பெற முடியும்.

தகவல் தொகுப்பு :
*கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர். ph : 82480 80922.*



# 115வது MASU நாள் விழாவில்

# தேசியளவில் சிறந்து விளங்கும் வேளாண் அறிவியலாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன

கோயம்புத்தூர், ஜூலை 20

இந்தியாவின் மிகப்பழமையான மற்றும் பெருமைமிக்க வேளாண் மாணவர் அமைப்புகளில் ஒன்றான மெட்ராஸ் வேளாண் மாணவர் கூட்டமைப்பு (MASU), 1911 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1923 ஆம் ஆண்டு சங்கமாகப் பதிவு செய்யப் பட்ட இவ்வமைப்பு, தனது 115வது MASU நாள் விழா மற்றும் பொதுக்குழு க்கூட்டம் – 2026-ஐ, 14.07.26 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் அண்ணா அரங்கில் சிறப்பாகக் கொண்டாடியது.




850-க்கும் மேற்பட்ட ஆயுட்கால உறுப்பினர்களையும், 4,500-க்கும் மேற்பட்ட மாணவர் உறுப்பினர்களையும் கொண்டுள்ள MASU, கடந்த 115 ஆண்டுகளாக மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், அறிவியலாளர்கள், கல்வியாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் வேளாண் வல்லுநர்களை ஒருங் கிணைத்து, இந்திய வேளாண்மையின் முன்னேற்றத்திற்கும், தலைமைத்துவ வளர்ச்சிக்கும், புதுமைகளுக்கும் தொடர்ந்து பங்களித்து வருகிறது.

விழாவிற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் செயல்துணைவேந்தரும், MASU-வின் தலைமைப் புரவலருமான

முனைவர் கா. சுப்ரமணியன் தலைமை வகித்தார். MASU தலைவர் மற்றும் இயக்குநர் (CPMB & B) முனைவர் ந.செந்தில் வரவேற்புரையாற்றி, வேளாண் சமூகத்தின் முன்னேற்றத்தில் MASU–வின் வரலாற்றுச் சிறப்புமிக்க பங்களிப்புகளை எடுத்துரைத்தார்.

MASU செயலாளர் முனைவர் கோ.பூமிராஜ், ஆண்டறிக்கையை சமர்ப்பித்தார். அதில், MASU விருதுகள் - 2026–க்கு வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த பல்வேறு துறைகளைச் சேர்ந்த சிறந்த வல்லுநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டதாகத் தெரிவித்தார். ஆய்வுக் குழுவின் துல்லியமான மதிப்பீட்டின் அடிப்படையில், வேளாண் ஆராய்ச்சி, வேளாண் விரிவாக்கம், வேளாண் தொழில்முனைவு, இளம் சாதனையாளர், வேளாண்தொழில்நுட்ப முன்னோடி, புதுமைச் சிறப்பு மற்றும் இந்திய வேளாண்மைக்கு சிறப்பான பங்களிப்பை வழங்கியோரைக் கௌரவிக்கும் வகையில் புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட தேசியச் சிறப்பு விருது உள்ளிட்ட பிரிவுகளில் விருதாளர்கள் தேர்வு செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

மேலும், MASU நாள் 2026–ஐ முன்னிட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் அனைத்து வளாகங்களிலும் நடத்தப்பட்ட கல்வி, இலக்கியம், பண்பாடு மற்றும் தொழில்நுட்பப் போட்டிகளில் 150–க்கும் மேற்பட்ட மாணவர்கள் வெற்றி பெற்று சிறப்பித்ததாகவும் தெரிவித்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண்மைப்புல முதன்மையரும், பட்டமேற்படிப்புக் கல்விப்பள்ளி முதன்மையருமான முனைவர் ச.பாபு வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி ICAR - தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் முனைவர் யூ.செல்வராஜன் மற்றும் கோயம்புத்தூர் வன மரபியல் மற்றும் மரப்பெருக்க நிறுவகத்தின் முதன்மை தலைமை வனப் பாதுகாவலரும் இயக்குநருமான வீ.ரபிகுமார், ஆகியோர், வேளாண் கல்வி, ஆராய்ச்சி, புதுமை மற்றும் முன்னாள் மாணவர் ஒருங்கிணைப்பில் MASU ஆற்றிவரும் சிறப்பான பணிகளைப் பாராட்டிப் பேசினர்.

நாட்டின் வேளாண் வளர்ச்சிக்காக சிறப்பான பங்களிப்பை வழங்கிய அறிவியலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், புதுமையாளர்கள் மற்றும் வேளாண் முன்னோடிகளுக்கு MASU விருதுகள் - 2026 வழங்கப்பட்டன.

மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு வளாகங்களில் நடைபெற்ற MASU நாள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

MASU விருதுகளுக்கான தேர்வை வெளிப்படைத் தன்மை, நேர்மை மற்றும் தகுதி அடிப்படையில் மேற்கொண்ட ஆய்வுக் குழு உறுப்பினர்களும் இவ்விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.


இது MASU விருதுகளின் நம்பகத் தன்மையையும் பெருமையையும் மேலும் உயர்த்தியுள்ளது.

பொதுக்குழுக் கூட்டத்தில், கடந்தாண்டு செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டதுடன், எதிர்காலத் திட்டங்கள், உறுப்பினர் சேர்க்கை விரிவாக்கம், முன்னாள் மாணவர் தொடர்புகளை வலுப் படுத்துதல், மெட்ராஸ் வேளாண் இதழின் உலகளாவிய பரவலை அதிகரித்தல் மற்றும் MASU–வின் நோக்கங்களை மேலும் வலுப்படுத்த புதிய முயற்சிகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப் பட்டது.

மெட்ராஸ் வேளாண் மாணவர் கூட்டமைப்பு இந்திய வேளாண் கல்வி மற்றும் தொழில்முறை தலைமைத்துவத்தின் அடையாள மாக தொடர்ந்து திகழ்ந்து வருகிறது.

நிகழ்ச்சியின் நிறைவாக, MASU துணைத் தலைவர் முனைவர் M. கார்த்திகேயன் நன்றியுரை வழங்கினார்.




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333